**தலைப்பு 130 – அரச நிர்வாகம் மற்றும் முகாமைத்துவ அமைச்சு தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 ஆம் ஆண்டு**

2017 இன் 32 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்த) சட்டத்தினால் திருத்தப்பட்ட 2016 இன் 24 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் முதலாவது அட்டவணையிலும் மூன்றாவது அட்டவணையிலும் குறிப்பிடப்பட்ட தலைப்புக்கள் மற்றும் விடய இலக்கம் என்பவற்றின் கீழ்வரும் ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக் கூற்றுக்கள் மற்றும் வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டின் 3.2.2 ஆம் அட்டவணையில் உள்ளடக்கப்பட்ட வருமான குறியீட்டுகளுக்குரிய வருமான கணக்குகளும் அரச நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சினால் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டன. அக்கணக்குகளிலிருந்தும் இணக்கக் கூற்றுக்களில் நிரூபணமாகும் நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன.

### 1.2 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் நிதி முகாமைத்துவம் மற்றும் கணக்குகள் தொடர்பான பொறுப்பு

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 124 பிரமாணத்தின் பிரகாரம் அரசின் பண உழைப்பு மற்றும் அரசிற்கு கிடைக்க வேண்டிய பணத்தை சேகரித்தல் உட்பட அரசின் சகல நிதி நடவடிக்கைகளையும் மேற்பார்வை தொடர்பாக பொது அதிகாரம் நிதி அமைச்சருக்கு கையளிக்கப்பட்டுள்ளது. நிதி அமைச்சரால் அப்பொறுப்புக்களை நிறைவேற்றும் பொருட்டு நிதிப்பிரமாணம் 124(2) பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். நிதிப்பிரமாணம் 125(1)(அ) பிரகாரம் திணைக்களத் தலைவர் தனது திணைக்களத்தின் சகல பணக்கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தராக இருப்பதுடன் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர் திறைசேரியால் நியமிக்கப்பட்டுள்ளார். பாராளுமன்றத்தில் விதிக்கப்படும் வரையரைகளுக்குள்ளே தமது கடமைகளை நிறைவேற்றி சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

### 1.3 கணக்காய்வு விடயப் பரப்பு

தலைப்பு 130 – அரச நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் தொடர்பாக திட்டமிடல், அரச செலவினங்கள், அரச வருமானங்கள், மனித மற்றும் பௌதீக வள முகாமைத்துவம், உள்ளக கட்டுப்பாட்டு ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல், சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்குதல் மற்றும் புத்தகங்கள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களை நாளதுவரையாக பேணுதல், கணக்குகளைத் தயாரித்து உரிய காலப்பகுதியில் சமர்ப்பித்தல், செயலாற்றல் குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்டு தரப்பினருக்கு இடையே செயலாற்றல் அறிக்கைகளை விநியோகித்தல் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2018 செப்தெம்பர் 10 ஆந் திகதி அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்கள், கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் மற்றும் செயலாற்றல் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம்

என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**1.4 கணக்காய்வு அவதானிப்புக்கள்**

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான அரச நிர்வாகம் மற்றும் முகாமைத்துவ அமைச்சில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் மேற்படி 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் விரிவாக காண்பிக்கப்பட்டுள்ளன. அந்த அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள் இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தி முதல் 2.18 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. நிதி நிர்வாகத்தின் போதுமானதன்மை உறுதிப்படுத்தப்படும் வகையில் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 127 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளை நிறைவேற்றும் போது கண்டறியப்பட்ட பின்வரும் குறிப்பில் பொழிப்பாக்கப்பட்டு காண்பிக்கப்பட்டுள்ள கணக்காய்வு அவதானிப்புக்களுக்கு உட்படத் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தராக தமது கணக்களிதன்மையை திருப்திகரமாக நிறைவேற்றியுள்ளதாக அவதானிக்கப்பட்டது.

| நிதிப்பிரமாணம் 127 இன் பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்களிதன்மை | | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் அதன் ஏற்பாடுகளுடன் இணங்காதிருந்தமை | | அவதானிப்புக்கள் உள்ளடக்கப்பட்ட அறிக்கையின் பந்தியுடனான தொடர்பு |
|---|---|---|---|---|
| 127(1)(அ) | சரியான மற்றும் நிதி முறையாக செய்யப்படுவதாக உறுதிப்படுத்தப்படும் வகையில் சகல நிதிச் செயற்பாடுகளும் திட்டமிடப்பட வேண்டும். | 1. | செயல்நடவடிக்கைத் திட்டம் சரியாக தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | 2.1 |
| | | 2. | பெறுகை நடவடிக்கைகள் போதியளவில் திட்டமிடப்படாமை | 2.4.2 |
| | | 3. | பதிவேடுகளும் புத்தகங்களும் பேணப்படாமை | 2.15 |
| 127(1)(ஆ) | செலவினம் மற்றும் அரச வருமான சேகரிப்பு தொடர்பாக போதியளவு கட்டுப்பாட்டிற்கும் ஏற்பாடுகள் தயாரிக்கும் முறையொன்று தயாரித்துக் கொள்ளப்பட்டுள்ளதாகவும் வேண்டும். | 1. | முகாமைத்துவத்தில் பலவீனங்கள் | 2.9 |
| | | 2. | தீர்வு செய்யப்படாத கணக்காய்வு பந்திகள் | 2.8 |
| | | 3. | இணங்காமைகள் | 2.16 |
| | | 4. | மனிதவள முகாமைத்துவத்தில் பலவீனங்கள் | 2.17 |
| 127(2) | தமது நிர்வாகத்தின் கீழ் காணப்படும் திணைக்களங்களில் அப்போது இருக்கும் செலவின விடயங்கள் உட்பட புதிதாக | 1. | எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டு மட்டத்தை பெற்றுக்கொள்ளாமை | 2.2(ஆ) |

| | | | | |
|---|---|---|---|---|
| | அல்லது கூடுதலாக செலவு செய்வதற்கான முன்மொழிவுகள் சிக்கனமாகவும் செயற்திறனான வகையில் அமைச்சில் நுண் பரிசீலனைக்கு உட்படுத்தல் | 2. | செயல்திட்டத்தை நிறைவேற்றுவதில் தாமதம் | 2.2(இ) |
| | | 3. | பெறுகை செயற்பாடுகளை செயற்படுத்துவதிலுள்ள குறைபாடுகள் | 2.4.3 |
| 127(3) | ஐயத்திற்குரிய அல்லது சிக்கலான விடயங்கள் அனைத்தையும் தமது சொந்த நிர்வாக அனுபவத்தையும் தீர்மானத்தையும் அதில் பிரயோகிப்பதற்காக அவருக்கு வழங்கியமை. | 1. | வாகனங்களைப் பயன்படுத்துவதில் குறைபாடு | 2.5(ஆ)(i,ii) |
| | | 2. | அலுவலகப் பயன்பாட்டில் குறைபாடுகள் | 2.5(இ) |
| | | 3. | விளைவற்ற மற்றும் குறைந்த பயன்பாட்டுடன் சொத்துக்கள் காணப்படல் | 2.5(உ) |
| | | 4. | வெளித்தரப்பினருக்கு வழங்கப்பட்டுள்ள சொத்துக்கள் | 2.5(ஊ) |
| | | 5. | பொதுமக்களுக்கான சேவைகளை நிறைவேற்றுவதில் குறைபாடுகள் | 2.10 |
| 127(4) | தமது ஒவ்வொரு கணக்கீட்டு உத்தியோகத்தரால் ஒதுக்கீட்டுக் கணக்குகள் முறையாக சமர்ப்பிக்கப்படு வதாகவும் தாம் அனுப்பி கையொப்பமிடுவதற்கு முன்னர் அமைச்சில் பரீட்சிக்கப்பட்ட தெனவும் அவ்வாறே மதிப்பீடுகளில் நிதி ஏற்பாடு மற்றும் உள்ளவாறான செலவினத்திற்கு இடையே காணப்படும் கருத்திற் கொள்ளக் கூடியளவு வேறுபாடு தம்மால் அழுத்தமாக புலனாய்விற்கு உட்படுத்தப்படல் | 1. | வருடாந்த பாதீட்டு எல்லையை விஞ்சி கடப்பாடுகளுக்கு உட்படல் | 2.6 |
| | | 2. | பொது வைப்புக் கணக்குகளில் குறைபாடு | 2.14 |
| 127(5) | திணைக்களத்தின் மதிப்பீடுகளில் நிதிஏற்பாடு மற்றும் செலவினத்திற்கு இடையே உள்ள கருத்திற் கொள்ளக் கூடியளவு வேறுபாடு அமைச்சினால் அழுத்தமாக புலனாய்விற்கு உட்படுத்தப்பட்டதாகவும் | 1. | ஒதுக்கீடு செய்த ஏற்பாடுகளைப் பயன்படுத்தாமை | 2.11(i),(iii) |
| | | 2. | மிகை நிதிஏற்பாடு செய்யப்பட்டிருந்தமை | 2.11(ii) |

| | | | | |
|---|---|---|---|---|
| 127(6) | கணக்கீட்டு உத்தியோகத்தர்களின் பொறுப்பின் பேரில் காணப்பட்ட வருமானம் அல்லது அரசிற்கு கிடைக்க வேண்டிய ஏனைய கட்டணங்கள் சேகரிக்கும் செயற்பாடுகளை உரிய கவனத்துடன் செயற்பட்டு அமைச்சின் பரிசோதனைகளுக்கு உட்படுத்துதல் | 1. | வருமானக் கணக்குகளில் குறைபாடுகள் | 2.12 |
| | | 2. | அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்கணக் கணக்கில் குறைபாடுகள் | 2.13 |
| 127(7) | உத்தியோகத்தர்கள் ஊழியர்களின் தாமதம், கவனயீனம், தவறுகள் அல்லது மோசடியால் அரசிற்கு நட்டம் ஏற்பட்ட சந்தர்ப்பங்களில் நிதிப்பிரமாணம் 103 முதல் 108 வரையான பிரமாணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளைக் கணக்கீட்டு உத்தியோகத்தர்களினால் கடைப்பிடிக்கப்பட்டதாகவும், நிதிப்பிரமாணம் 156(1) இன் பிரகாரம் அந்நட்டங்கள் தொடர்பாக பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்கள் / மிகைக் கட்டணங்களை விதிப்பதற்கும் கண்காணிக்கும் பொருட்டு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டால் தமக்கு கையளிக்கப்பட்டுள்ள பொறுப்புக்களிலிருந்து கணக்கீட்டு உத்தியோகத்தர் விடுவிக்கப்பட்டதாக கருதப்படும். அரசாங்க கணக்கு குழுவின் முன் தோன்றுவதற்கும் தாம் பொறுப்பு வகிக்கும் திணைக்களங்களின் கணக்குகளை தெளிவுபடுத்துவதற்கும் நியாயப்படுத்துவதற்கும் கணக்கீட்டு உத்தியோகத்தருடன் ஒத்துழைத்தலும் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கடமைகளுக்கு பொறுப்பாகுதல். | 1. | சொத்துக்களிலிருந்து கிடைக்க வேண்டிய வருமானங்கள் கிடைக்காமை | 2.5(ஈ) |
| | | 2. | சேதங்கள் தொடர்பான பொறுப்புக்கள் | 2.7 |
| | | 3. | நிதியுடன் தொடர்புபடுகின்ற உத்தியோகத்தர்களிடமிருந்து பிணை வைப்புக்களை பெற்றுக்கொள்ளப்படாமை | 2.18 |

## 2 போதியளவு மற்றும் முக்கியமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 2.1 செயலாற்றல்

#### திட்டமிடல்

2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2017 ஆம் ஆண்டிற்காக செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் போது அமைச்சினால் நிறைவேற்ற வேண்டிய 12 பிரதான பணிப்பொறுப்புக்கள் காணப்பட்ட போதும், அதற்கான வருடாந்த செயற்பாடுகளுக்கான கட்டு நிதி தேவைத் திட்டம் (Imprest Requiremennt Plan) தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2 பணிப்பொறுப்புக்கள் நிறைவேற்றப்படாமை

பின்வரும் அவதானிப்புக்கள் நிறைவேற்றப்படுகின்றன.

#### (அ) செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட பணிப்பொறுப்புக்கள் நிறைவேற்றப்படாமை

வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் அமைச்சினால் 12 பிரதான பணிப்பொறுப்பின் கீழ் 136 செயற்பாடுகளை நிறைவேற்ற வேண்டியிருந்த போதிலும், அதில் 132 பணிகள் மாத்திரம் நிறைவேற்றப்பட்டிருந்தது. அவ்வாறு நிறைவேற்றப்படாத பணிகளுக்காக கூட்டுமொத்தமாக ரூபா 10.1 மில்லியன் நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தது.

#### (ஆ) எதிர்பார்க்கப்பட்ட பூர்த்தி மட்டம் அடையப்படாமை

வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தில் காண்பிக்கப்பட்டுள்ள 06 பணிகளில் 04 பணிகளுக்காக ரூபா 93.78 மில்லியன் நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தது. அது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) இணைந்த சேவைகள் பிரிவில் சகல சேவைகளுக்கும் 7,339 உத்தியோகத்தர்களைச் சேர்ப்பதற்கும், 5,663 உத்தியோகத்தர்களைப் பயிற்றுவிப்பதற்கும் ஒதுக்கப்பட்ட தொகையிலிருந்து ரூபா 44 மில்லியன் நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்ததுடன் செலவினம் தொடர்பாக செயன்முன்னேற்றம் அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை.

(ii) மனிதவள அபிவிருத்திப் பிரிவில் 25 மாவட்டங்களில் முகாமைத்துவமல்லாத உத்தியோகத்தர்களின் பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்திற்காக ரூபா 4.9 மில்லியன் செலவிடப்பட்டிருந்த போதும், பயிற்சியளிக்கப்பட வேண்டிய உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை மற்றும் செயல்முன்னேற்றம் என்பன காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) தகவல் தொழில்நுட்ப பிரிவில் இணையத்தள முறைமையைப் பழுதுபார்த்தலும் பராமரிப்பும் மற்றும் மென்பொருள் செலவினங்களுக்கான ரூபா 17 மில்லியன் நிதிஏற்பாட்டில் மொத்த நிதிஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது.

(iv) இலங்கை நிர்வாக சேவையின் 438 உத்தியோகத்தர்களை நிரந்தரமாக்குவதற்கும் பதவியுயர்வு வழங்குவதற்கும் திட்டமிடப்பட்டிருந்ததுடன், செயல்முன்னேற்றம் 52 சதவீதம் மாத்திரமாக இருந்தது.

(v) இலங்கை திட்டமிடல் சேவைப் பிரிவில் புதிதாக 133 உத்தியோகத்தர்களை சேர்ப்பதற்கும், 168 பேரை இடமாற்றம் செய்வதற்கும் நிலைமைக் கட்டுப்பாடு மற்றும் வினைத்திறன் கருதுகோள் மேம்படுத்துதல் திட்டமிடப்பட்டிருந்த போதிலும், திட்டமிடப்பட்ட நிதிஏற்பாடு அல்லது பயன்படுத்தப்பட்ட நிதிஏற்பாடு தொடர்பான விபரங்கள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதம்**

அமைச்சினால் கீழே குறிப்பிடப்படுகின்ற செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதம் அவதானிக்கப்பட்டது.

(i) கண்டி உத்தியோகபூர்வ இல்லத்தை நிர்மாணிப்பதற்காக 2017 ஆம் ஆண்டின் போது ஒதுக்கப்பட்ட நிதிஏற்பாடு ரூபா 15 மில்லியனில் ரூபா 13.29 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. எனினும், எதிர்பார்க்கப்பட்ட 16 சதவீதமான பௌதீக செயல்முன்னேற்றத்தில் 06 சதவீதம் மாத்திரமே நிறைவேற்றப்பட்டிருந்தது.

(ii) பொலன்னறுவை உத்தியோகபூர்வ இல்லத்தை நிர்மாணிப்பதற்காக 2017 ஆம் ஆண்டின் போது ஒதுக்கப்பட்ட நிதிஏற்பாடு ரூபா 50 மில்லியனில் ரூபா 49.32 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. எனினும், எதிர்பார்க்கப்பட்ட 18 சதவீதமான பௌதீக செயல்முன்னேற்றத்தில் 04 சதவீதம் மாத்திரமே நிறைவேற்றப்பட்டது.

## 2.3 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைதல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிலைபேறான அபிவிருத்தி தொடர்பாக ஐக்கிய நாடுகளின் ஆண்டு 2030 ''நிகழ்ச்சி நிரல்'' இன் பிரகாரம் சகல அரசாங்க நிறுவனங்களாலும் நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததுடன் மீளாய்வாண்டிற்குரிய அரச நிர்வாகம் மற்றும் முகாமைத்துவ அமைச்சினால் தமது விடயப்பரப்பின் கீழ் கொண்டுவரப்பட்ட பணிகள் தொடர்பாக எவ்வாறு செயற்பட வேண்டியுள்ளது தொடர்பாக தெளிவுபடுத்தப்படவில்லை.

(ஆ) மேற்கூறப்பட்ட பிரகாரம் ஆண்டு 2030 இன் நிகழ்ச்சி நிரல் தொடர்பாக அரச நிர்வாகம் மற்றும் முகாமைத்துவ அமைச்சினால் தெளிவுபடுத்தப்படாமையின் காரணமாக அந்தப் பணியுடன் தொடர்பான நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள், இலக்குகள் மற்றம் இலக்குகளை அடைய வேண்டிய கட்டங்களில், இலக்கின் அடிப்படையில் அடையப்பட்டவைகளை அளவிடுவதற்கான குறிகாட்டிகளை இனங்காண்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.4 பெறுகைகள்

### 2.4.1 பெறுகை நடைமுறைகளின் மூலம் வழங்கல் மற்றும் சேவைகளைப் பெற்றுக்கொள்ளல்

அமைச்சினால் அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து வழங்கல் மற்றும் சேவைகளைப் பெறவேண்டிய ரூபா 47.714 மில்லியன் தொகையான நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 46.262 மில்லியன் தொகையான நிதிஏற்பாடு பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ரூபா 1.452 மில்லியன் அதாவது வழங்கப்பட்ட நிதிஏற்பாட்டில் 3.043 சதவீத நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.

### 2.4.2 பெறுகைத் திட்டமிடல்

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பெறுகை நடைமுறைகள் தொடர்பாக முழுமையான பெறுகைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 4.2.1 வழிகாட்டியின் பிரகாரம் பெறுகைகள் நிறுவனத்தால் பிரதான பெறுகைத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டியிருந்ததுடன் அந்த பிரதான பெறுகைத் திட்டத்தில் ஆகக் குறைந்தது 03 வருட காலத்திற்காக எதிர்பார்க்கப்பட்ட பெறுகைச் செயற்பாடுகளை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.4.3 பெறுகை நடைமுறைகளை அமுல்படுத்துதல்

மொனராகலை விடுமுறை விடுதியை நிர்மாணிப்பதற்காக ரூபா 29,944,552 தொகை செலவிடப்பட்டிருந்தது. அது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2007 இன் ஆலோசனையாளர்களைத் தெரிவு செய்தல் மற்றும் சேவையில் ஈடுபடுத்துதல் வழிகாட்டிக் கோவையின் 3.2 ஆம் வழிகாட்டியின் பிரகாரம் ஆலோசனைச் சேவை வழங்கும் நிறுவனமொன்றதைத் தெரிவு செய்யும் போது போட்டி அடிப்படையின்றி முன்னர் விடுமுறை விடுதி நிர்மாணிப்பதற்காக ஆலோசனை சேவை வழங்கிய நிறுவனமொன்று மீண்டும் தெரிவு செய்யப்பட்டிருந்தது.

(ii) முதலாவது பொறியியலாளர் மதிப்பீடு சந்தை விலை கணிப்பீடு தொடர்பாக கவனத்தில் கொள்ளக்கூடிய குறைந்த மட்டத்தில் காணப்பட்டமையின் காரணமாக இரண்டாவது தடவையாக கேள்வி கோருவதற்கு செய்திப்பத்திரிகையில் அறிவித்தலைப் பிரசுரிப்பதற்கு ரூபா 70,068 தொகையான மேலதிகக் கிரயமொன்றைச் செய்ய வேண்டியேற்பட்டிருந்தது.

(iii) இரண்டாவது தடவை கேள்வி கோரும் போது பொறியியலாளர் மதிப்பீடு ரூபா 3,012,415 இனால் அதிகரிக்கப்பட்டு திருத்தம் செய்யப்பட்டிருக்கும் போது முதலாவது தடவை கேள்வி சமர்ப்பித்த நிறுவனம் இரண்டாவது தடவை கேள்வி கோரும் போது குறைந்த விலை சமர்ப்பித்த ஒப்பந்தம் பெறப்பட்டிருந்தது. இரண்டாவது தடவை கேள்வி கோரும் போது அழைப்பிதழில் ‘‘ஊவா மாகாணத்தில் பதிவு செய்துள்ள’’ ஒப்பந்தகாரருக்காக வரையறுத்த நிபந்தனையொன்று உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும், கிடைக்கப்பெற்ற இரண்டு கேள்விகளுக்கும் அந்த நிபந்தனையைப் பூர்த்தி செய்திராமை அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் 1.2.1 ஆம் வழிகாட்டிக்கு புறம்பாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

### 2.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

அமைச்சின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

#### (அ) சொத்துக்களை பதிவேடுகளுக்குக் கொண்டுவரல்

2017 யூன் 28 ஆந் திகதிய 01/2017 ஆம் இலக்க நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சின் சொத்துக்கள் முகாமைத்துவச் சுற்றறிக்கையின் பிரகாரம்

கட்டுப்பாட்டாளர் நாயகம் அலுவலகத்திற்கு தகவல்கள் சமர்ப்பிக்கும் மாதிரிப் பத்திரத்தில் முகாமைத்துவ மறுசீரமைப்பு மற்றும் பொதுமக்கள் இணைப்புப் பிரிவின் 08 விடுமுறை விடுதிகள் அமைக்கப்பட்டுள்ள காணி தொடர்பான தகவல்கள் சமர்ப்பிக்கப்படவில்லை.

**(ஆ) வானகப் பயன்பாடு**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) அமைச்சிற்கு மீளாய்வாண்டின் இறுதியளவில் கீழே குறிப்பிடப்படுகின்ற பிரகாரம் 61 வாகனங்கள் காணப்பட்டதுடன் அந்த வாகனங்களிலிருந்து 903,298 கிலோமீற்றர் ஓடப்பட்டிருந்ததுடன் அதற்கான எரிபொருள் மற்றும் உராய்வு எண்ணெய்க்காக ரூபா 5,091,494 தொகையும், வாகன சேர்விசுக்காக ரூபா 5,550,832 தொகையும், வாகன பழுதுபார்த்தலுக்காக ரூபா 1,471,822 தொகையும் மற்றும் வாகனங்களை காப்புறுதி செய்வதற்காக ரூபா 4,737,328 தொகையுமாக கூட்டுமொத்தமாக ரூபா 16,851,476 செலவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அமைச்சினால் வாகனங்களை ஓட்டத்தில் ஈடுபடுத்துவதற்காக சாரதி சம்பளம் மற்றும் படிகள் தவிர ஒரு கிலோமீற்றருக்காக ரூபா 18.65 தொகை செலவிடப்பட்டிருந்தது.

| | வாகனங்களின் வகை | வாகன எண்ணிக்கை | பெறுமதி | சாரதி சம்பளம் மற்றும் படிகள் தவிர ஏனைய செலவினம் | ஓடிய கிலோமீற்றர் எண்ணிக்கை | ஓடிய கிலோமீற்றர் ஒன்றுக்கான செலவினம் |
|---|---|---|---|---|---|---|
| | | | ரூபா | ரூபா | | |
| 1. | கார் | 38 | 345,598,532 | 8,943,142 | 480,756 | 18.60 |
| 2. | வேன் | 06 | 36,000,000 | 2,342,549 | 96,762 | 24.21 |
| 3. | கெப் | 16 | 80,260,000 | 5,547,449 | 319,126 | 17.38 |
| 4. | மோட்டார் சைக்கிள் | 01 | 25,000 | 18,336 | 6,624 | 2.77 |
| | | 61 | 461,883,532 | 16,851,476 | 903,268 | 18.65 |

(ii) 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க அரச நிர்வாகச் சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தியின் பிரகாரம் ஒவ்வொரு எரிபொருள் பரிசோதனையின் பின்னரும் 12 மாத கால எல்லையில் அல்லது 25,000 கிலோமீற்றர் தூரம் பிரயாணம் செய்ததன் பின்னர் அல்லது இயந்திரத்துடன் தொடர்பான முக்கியமான பழுதுபார்த்தல்களின் பின்னர் அல்லது இது போன்ற காரணங்களுக்கிடையில் முதலாவதாக பயன்படுத்தப்பட்ட சந்தர்ப்பத்தின் பின்னர் மீண்டும் எரிபொருள் பிரசோதனை செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், தொகுதியில் 28 வாகனங்களில் மீளாய்வாண்டின் இறுதியில் 04 வாகனங்களுக்கு மாத்திரம் எரிபொருள் எரிவு பரீட்சிக்கப்பட்டிருந்தது.

**(இ) அலுவலகத்தை நடாத்திச் செல்லும் செலவினம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) அமைச்சிற்குச் சொந்தமாக 09 அலுவலகக் கட்டிடங்கள் காணப்பட்டதுடன் அதற்கு மேலதிகமாக வருடாந்தம் ரூபா 56,969,546 வாடகையின் அடிப்படையில் பெறப்பட்ட 02 கட்டிடங்களுமாக 11 கட்டிடங்கள் அமைச்சிற்கு இருந்தன.

(ii) வருடாந்தம் சுத்திகரித்தல் கட்டணம் ரூபா 6,378,731 ஆக இருந்ததுடன் பாதுகாப்பு சேவைக் கட்டணம் ரூபா 4,078,700 ஆகும். அதன் பிரகாரம் மொத்தக் கட்டிடத்திற்கான செலவினம் ரூபா 67,426,977 ஆனமையால் ஒரு நபர் அலுவலகத்தை நடாத்திச் செல்வதற்கான செலவினம் ரூபா 52,390 ஆகக் காணப்பட்டது.

**(ஈ) சொத்துக்களிலிருந்து அரசாங்கத்திற்கு கிடைக்க வேண்டிய வருமானம் கிடைக்காமை**

2012 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரை 90 வீடுகளுக்கான நிலுவை வாடகை வருமானம் ரூபா 52,487,029 ஆக இருந்ததுடன் 2017 ஆம் ஆண்டில் 31 வீடுகளுக்கான நிலுவை வாடகை ரூபா 3,288,092 ஆகும்.

**(உ) விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

புத்தக விற்பனை சாலையொன்றை நிர்மாணிப்பதற்காக ரூபா 1,340,429 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும், இரண்டு வருட காலம் முதல் அது பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டதுடன் காலப்பகுதியில் இனங்காணப்பட முடியாத 02 வாகனங்கள் அமைச்சு வளாகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

**(ஊ) வெளித்தரப்பினருக்கு வழங்கப்பட்ட சொத்துக்கள்**

அமைச்சினால் ரூபா 5,000,000 கிரயமான மோட்டார் வாகனமொன்று இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்திற்கு சட்டரீதியாகக் கையளிக்கப்படாமல் விடுவிக்கப்பட்டிருந்தது.

## 2.6 கடப்பாடுகளும் பொறுப்புக்களும்

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2017 ஏப்ரல் 17 ஆந் திகதிய 255/2017 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் 02(அ) பந்திக்கு இணங்காமல் 13 செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 255.3 மில்லியன் நிதிஏற்பாடு ரூபா 15.8 மில்லியனால் மிகைத்து ரூபா 271.1 மில்லியன் கடப்பாடுகள் ஏற்படுத்தப்பட்டிருந்தன.

(ஆ) தேவையான வெளிப்படுத்தல்களைச் செய்யாமல் மீளாய்வாண்டில் பொறுப்புக்களுக்காக 2018 ஆம் ஆண்டின் போது கொடுப்பனவு செய்யப்பட்ட பெறுமதி ரூபா 2,808,983 ஆகும்.

## 2.7 இழப்புக்கள் தொடர்பான பொறுப்புக்கள்

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதிப்பிரமாணம் 104(2)(ஆ) இன் பிரகாரம் நட்ட இழப்பை தாமதமின்றி அறவிடுவதற்கு தவறுமாயின் நட்ட இழப்பை அறவிடாமை தொடர்பில் பொறுப்பு

வாய்ந்த உத்தியோகத்தரிடமிருந்து அந்தப் பணத்தொகையை மிகைக் கட்டணமாக அறவிட வேண்டியமை அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும் 2017 ஆம் ஆண்டின் யூன் மாதத்திலும் திசெம்பர் மாதத்திலும் ஏற்பட்ட 2 விபத்துக்கள் தொடர்பாக காப்புறுதி பெறப்பட்டு பழுதுபார்த்தல்கள் 2018 ஆம் ஆண்டின் யூலை மற்றும் ஆகஸ்ட் மாதங்களில் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. அதுவரை அந்த வாகனங்கள் விவைற்று வாகன கராஜில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. மேலும், அதில் ஒரு வாகனஙத்தின் முழுமையான பரிசோதனையின் போது நட்ட, இழப்புப் பெறுமதியை கண்டறிவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் மதிப்பீடு செய்யப்பட்ட பழுதுபார்த்தல் செலவினமாக இனங்காணப்பட்ட ரூபா 2,110,260 தொகைக்காக காப்புறுதி மேவுகையிலிருந்து கிடைத்த தொகையான ரூபா 1,411,690 தொகை நிதிப்பிரமாணம் 104(4) இன் பரிசோதனை அறிக்கையின் பிரகாரம் நட்டமாக இனங்காணப்பட்டிருந்தது. அதன் காரணமாக நட்ட இழப்பின் பெறுமதி கவனத்தில் கொள்ளக்கூடிய நட்டமாக இருக்குமாயின் இதற்காக பொறுப்பு வாய்ந்த தரப்பினர் தொடர்பாக எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டிக்கவில்லை.

(ஆ) 2009 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் 04 வாகன விபத்துக்களால் ஏற்பட்ட ரூபா 1,150,121 தொகையான நட்டம் தொடர்பான பரிசோதனை நடவடிக்கைகள் 2018 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

**2.8 தீர்க்கப்படாத கணக்காய்வுப் பந்திகள்**

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையுடனான தொடர்பு | | தொடர்புடைய விடயம் |
|---|---|---|---|
| | ஆண்டு | பந்தி இலக்கம் | |
| (i) | 2016 | 06 | இலங்கை கணக்காளர் சேவையில் விசேட தரத்திற்குரிய 76 பதவிகளுக்கிடையே 10 பதவிகளுக்காக உள்ளபடியாக உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டிருந்ததுடன் எஞ்சிய பதவிகளுக்காக பதிற்கடமை உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். |
| (ii) | 2016 | 3.4(அ)(i) | 2000 நவம்பர் 02 ஆந் திகதிய அமப/00/1848/23/019 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் வெளிநாட்டு சேவையின் உத்தியோகத்தர்களுக்கு நிர்மாணிக்கப்பட்ட 20 வீடுகளை நிர்மாணிக்கும் நடவடிக்கைகள் 2006 ஆம் ஆண்டின் போது பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. நிர்மாண நடவடிக்கைகள் முடிவடைந்ததன் பின்னரும் இலங்கை வெளிநாட்டு சேவையில் இருக்கின்ற உத்தியோகத்தர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள அமைச்சிற்குச் சொந்தமான 07 வீடுகளை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |
| (iii) | 2016 | 3.4(அ)(ii) | பொரளை கொட்டவ வீதியில் அமைந்துள்ள அமைச்சிற்குச் சொந்தமான விடுதியொன்றில் சமய நிலையமொன்று நடாத்திச் செல்லப்படுகின்ற போதும், அமைச்சிற்கு கையேற்கப்படாமல் அதற்காக |

2009 ஆம் ஆண்டு முதல் ஆதனவரி செலுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டதுடன் 2011 – 2017 கால எல்லைக்காக ரூபா 34,548 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

**2.9 முகாமைத்துவ செயற்பாடுகள்**

தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது பின்வரும் நலிவுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2018 மார்ச் மாதத்தில் அமுல்படுத்தப்பட்ட கணக்காளர் சேவையின் இடமாற்ற பெயர்ப் பட்டியலின் பிரகாரம் இடமாற்றம் பெற்ற 47 உத்தியோகத்தர்கள் சேவையைக் கையேற்றமையை அறிவித்திருக்கவில்லை. அதனால் அந்த இடமாற்றம் அமுல்படுத்தப்பட்டிருந்ததா என உறுதிப்படுத்தப்படாதிருந்ததுடன் அமைச்சினாலும் அது தொடர்பாக பின்தொடர் நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை. மேலும், அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயல்நடைமுறை விதியின் 217 ஆம் பந்தியின் பிரகாரம் வருடாந்த இடமாற்றக் கட்டளையின் பிரகாரம் தேவையான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஆ) புலனாய்வுப் பிரிவிற்கு 2017 ஆம் ஆண்டின் போது முறைப்பாடுகளின் எண்ணிக்கை எவ்வளவு கிடைத்தது எனவும், அதில் விசாரணைகள் பூர்த்தி செய்யப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை, தற்காலிகமாக கைவிடப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை தொடர்பாக தயாரிக்கப்பட்ட தகவல் அறிக்கையொன்று பேணப்படாதிருந்ததுடன் புலனாய்வு செயற்பாடுகள் கையளிக்கும் பதிவேடும் நாளதுவரையாகப் பேணுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. எனினும், ஆவணப்படுத்தப்பட்ட தகவல்களின் பிரகாரம் 2017 ஆம் ஆண்டின் போது 14 புலனாய்வு உத்தியோகத்தர்களுக்கு கையளிக்கப்பட்ட 46 முறைப்பாடுகள் 2017 ஆகஸ்ட் 31 அந் திகதி வரையிலும் புலனாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

**2.10 பொது மக்களின் சேவைகளை நிறைவேற்றுதல்**

2016 இன் 12 ஆம் இலக்க தகவல் அறியும் உரிமை அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் அமைச்சில் தகவல் உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்ததுடன் 2017 ஆம் ஆண்டில் பொதுமக்களினால் 315 தகவல் கோரிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. அதில் 250 கோரிக்கைகளுக்காக நேரடியாக பதிலளிக்கப்பட்டிருந்ததுடன் மேலும், 26 கோரிக்கைகள் மற்றும் 02 ஆக முறையே முறையீட்டு உத்தியோகத்தருக்கும் ஆணைக்குழுவிற்கும் சமர்ப்பிக்கப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. மிகுதி 37 கோரிக்கைகளையும் நிராகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

**2.11 பணிப்பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக பாராளுமன்றத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்த நிதிஏற்பாடுகளை பயன்படுத்துதல்.**

2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த 05 ஆண்டு காலப்பகுதியில் அமைச்சிற்கு ஒதுக்கப்பட்டிருந்த நிதிஏற்பாடு, பயன்பாடு மற்றும் சேமிப்புக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| ஆண்டு | செலவின வகை | தேறிய நிதிஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | சேமிப்புக்கள் தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக |
|---|---|---|---|---|---|
| | | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| 2013 | மீண்டெழுபவை | 593.65 | 573.60 | 20.04 | 3.38 |
| | மூலதனம் | 537.98 | 303.79 | 234.19 | 43.53 |
| | **மொத்தம்** | **1,131.63** | **877.39** | **254.23** | **22.47** |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 2014 | மீண்டெழுபவை | 703.77 | 672.53 | 31.23 | 4.44 |
| | மூலதனம் | 455.81 | 407.80 | 48.0 | 10.53 |
| | **மொத்தம்** | **1,159.58** | **1,080.33** | **79.23** | **6.83** |
| 2015 | மீண்டெழுபவை | 1,092.31 | 1,048.86 | 43.43 | 4.0 |
| | மூலதனம் | 980.64 | 838.31 | 142.33 | 14.5 |
| | **மொத்தம்** | **2,072.95** | **1,887.17** | **185.77** | **8.96** |
| 2016 | மீண்டெழுபவை | 1,041.57 | 1,027.95 | 13.63 | 1.31 |
| | மூலதனம் | 479.19 | 441.75 | 37.43 | 7.81 |
| | **மொத்தம்** | **1,520.76** | **1,469.70** | **51.06** | **3.36** |
| 2017 | மீண்டெழுபவை | 1,082.00 | 1,039.71 | 42.32 | 3.91 |
| | மூலதனம் | 738.44 | 532.25 | 206.15 | 29.92 |
| | **மொத்தம்** | **1,820.44** | **1,571.96** | **248.47** | **13.65** |

**ஒதுக்கீட்டுக் கணக்கு**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) ஒரு செலவின விடயத்திற்காக ஒதுக்கப்பட்ட ரூபா 300,000 தொகையான மொத்த தேறிய நிதிஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ii) 12 செலவின விடயங்களுக்காக கூட்டுமொத்தமாக ரூபா 520.56 மில்லியன் மிகை நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டமையினால் அந்த செலவின விடயங்களுக்குரிய நிதிஏற்பாடுகளில் கூட்டுமொத்தமாக ரூபா 308.78 மில்லியன் மாத்திரம் பயன்படுத்தப்பட்டமையினால் சேமிப்பு ஒதுக்கப்பட்ட தேறிய நிதிஏற்பாட்டில் 17 சதவீதம் முதல் 89 சதவீதம் வரையிலான வீச்சினைக் கொண்டிருந்தது.

(iii) குறைநிரப்பு மதிப்பீட்டின் மூலம் மேலதிக நிதிஏற்பாட்டை ஒதுக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்ட 02 செலவின விடயங்களுக்கு பெறப்பட்ட குறைநிரப்பு நிதிஏற்பாடுகளில் 45 சதவீதம் மற்றும் 100 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தன. புதிய கணக்காளர்களைச் சேர்க்காமையும், இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகமும் பிரதமர் அலுவலகமும் இணைந்து அமுல்படுத்துவதற்கு எதிர்பார்த்த செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்கு முடியாதிருந்தமையும் சேமிப்பிற்கான காரணமாக இருந்ததாக செயலாளரால் கருத்துத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

**2.12 மதிப்பீடு செய்யப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானம்**

அமைச்சினால் 2017 ஆம் ஆண்டிற்காக வருமானக் குறியீட்டு இலக்கம் 20.02.01.01 இற்காக கூட்டுமொத்தமாக ரூபா 800 மில்லியன் தொகையான ஆரம்ப வருமான மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்ததுடன், அது ரூபா 900 மில்லியன் வரை அதிகரிக்குமாறு அரசிறைக் கொள்கைத் திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்ட கோரிக்கை நிறைவேற்றப்படவில்லை. எனினும், மீளாய்வாண்டின் போது கூட்டுமொத்தமாக ரூபா 912.6 மில்லியன் வருமானமொன்று சேகரிக்கப்பட்டிருந்தது. அது மதிப்பீடு செய்யப்பட்ட வருமானத்தில் 114 சதவீதமாக இருந்தது. விபரம் கிழே காண்பிக்கப்படுகின்றது.

| வருமானக் குறியீடு | 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | சேகரிக்கப்பட்ட வருமானம் மதிப்பீடு செய்யப்பட்ட வருமானத்தின் சதவீதமாக |
|---|---|---|---|---|
| | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | உள்ளபடியான வருமானம் | மிகை / (பற்றாக்குறை) | |
| | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | |
| 20.02.01.01 | 800 | 912.6 | 112.6 | 114 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 2017 ஆம் ஆண்டில் கட்டிட வாடகை, உள்ளபடியான வருமானம் ரூபா 122,782,924 இனால் அதிகரித்திருந்த போதிலும், 36 நிறுவனங்களுக்குரிய ரூபா 56,224,432 தொகையான வருமானத்தில் குறைவொன்று அவதானிக்கப்பட்டதுடன் அந்தக் குறைவின் அளவு 0.1 சதவீதம் முதல் 94 சதவீதம் வரையிலான வீச்சினைக் கொண்டிருந்தது.

**(ஆ) நிலுவையாக இருந்த வருமானம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவையாக இருந்த மொத்த வருமானம் ரூபா 188,087,784 ஆகக் காணப்பட்டது. அதில் 2014 திசெம்பர் 31 ஆந் திகதிக்கு முன்னர் காணப்பட்ட மீதி ரூபா 118,277,937 ஆனமையால் அது மொத்த நிலுவை வருமானத்தில் 63 சதவீதமான உயர் சதவீதத்தைக் கொண்டிருந்தது.

(ii) அரச நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் நிலுவை வாடகை வருமானம் மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 57,478,597 ஆகக் காணப்பட்டது. அதில் ரூபா 44,140,514 தொகை 2012 ஆம் ஆண்டிற்கு முன்னிருந்து நிலுவையாகக் காணப்படுகின்ற வாடகை வருமானமாக இருந்ததுடன் அதில் காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவிலிருந்து அறவிட வேண்டிய ரூபா 36,042,000 தொகையான கட்டிட வாடகையும் காணப்பட்டது. எனினும், அந்த நிறுவனத்தின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் அது ரூபா 7,474,535 ஆனமையால் இந்த இரண்டு பெறுமதிகளுக்கிடையே அசாதாரண வேறுபாடொன்றும் அவதானிக்கப்பட்டது.

## 2.13 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

**பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

அமைச்சிற்குரிய 13001 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளவாறானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளவாறானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளவாறானது |
| ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 64 | 54.303 | 26 | 28.768 | 191 | 130.6 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் இடமாற்றலாகிச் சென்ற உத்தியோகத்தர்களின் கடன் மீதி தவிர அறவீடுகள் நிலுவையாகக் காணப்பட்ட மீதிகளின் கூட்டுமொத்தம் ரூபா 1,308,130 ஆகும். அந்த நிலுவை மீதிகள் 01 வருடம் முதல் 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலவீச்சினைக் கொண்டதாகக் காணப்பட்டது. எனினும், அந்தக் கடன் மீதியை அறவிடும் பின்தொடர் நடவடிக்கைகள் மிகவும் நலிவான நிலையில் காணப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதியளவில் சேவையை விட்டுச் சென்ற 06 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 584,153 தொகையான கடன் மீதி அறவிட வேண்டியிருந்தது.

## 2.14 பொது வைப்புக் கணக்குகள்

அமைச்சிற்குரிய 05 பொது வைக்குக் கணக்குகளில் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட மீதிகளின் கூட்டுமொத்தம் ரூபா 17.37 மில்லியனாக இருந்த போதிலும் 2018 ஆகஸ்ட் 31 ஆந் திகதியளவில் அந்த மீதி ரூபா 15.08 மில்லியனாகக் காணப்பட்டது.

## 2.15 பதிவேடுகள் மற்றும் புத்தகங்களைப் பேணுதல்

அமைச்சினால் கீழே காட்டப்பட்டுள்ள பதிவேடுகள் பேணப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டது.

| | பதிவேடுகளின் வகை | உரிய பிரமாணங்கள் |
|---|---|---|
| (அ) | பிணைப் பதிவேடு | நிதிப்பிரமாணம் 891(1) |
| (ஆ) | மின் உபகரணங்கள் தொடர்பான பதிவேடு | நிதிப்பிரமாணம் 454(2) |
| (இ) | பொது 267 இன் பிரகாரம் சம்பவத் திரட்டு புத்தகம் (முகாமைத்துவ மறுசீரமைப்பு மற்றும் பொதுமக்கள் தொடர்பு பிரிவு) | நிதிப்பிரமாணம் 1645(அ) |

## 2.16 இணங்காமைகள்

### 2.16.1 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்ளுடன் இணங்காமைகள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காண்பிக்கப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | | | பெறுமதி | இணங்காமைகள் |
|---|---|---|---|---|
| | | | ரூபா | |
| (அ) | 1951 இன் 14 ஆம் இலக்க மோட்டார் வாகன அதிகாரச்சட்டத்தின் 151(2) மற்றும் 151(3) ஆம் பிரிவுகள் | | - | கவனமின்றியும் அதிக வேகத்துடனும் வாகனம் செலுத்தியமையின் காரணமாக 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளின் போது அமைச்சிற்குரிய வாகனங்கள் 06 சந்தர்ப்பங்களில் விபத்துக்குட்பட்டிருந்ததுடன், அதில் அமைச்சிற்கு ரூபா 4,184,149 தொகையான நட்டம் ஏற்பட்டிருந்தது. |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை | | | |
| | (i) | XIX ஆம் அத்தியாயத்தின் 6.1 மற்றும் 7.2 ஆம் பிரிவுகள் | - | ஏதாவது பதவிக்கு ஒதுக்கப்பட்ட விடுதியொன்று தவிர ஏனைய சகல விடுதிகளினதும் வாடகைக் காலம் 05 வருடங்களாக இருக்க வேண்டியிருந்ததுடன் வாடகைக் காலத்தை விஞ்சி வீடொன்றில் குடியிருப்பாராயின் அந்த வீட்டிலிருந்து அகற்றப்பட்ட வேண்டிய போதிலும், 16 வீடுகளில் குடியிருப்பவர்கள் தொடர்பாக அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | | |
| | (i) | நிதிப்பிரமாணம் 1646 | - | வாகனப் பொறுப்பு உத்தியோகத்தரால் அறிக்கை சமர்ப்பிக்கப்படுகின்ற மாதத்தின் பின்னர் அடுத்துவரும் மாதத்தின் 15 ஆந் திகதிக்கு முன்னர் 268(அ) பொழிப்பின் மூலப் பிரதியுடன், அந்தந்த மாதத்தின் நாளாந்த ஓட்ட அட்டவணை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பப்பட வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) | நிதிப்பிரமாணம் 1642, 104 | - | விபத்துக்குட்பட்டிருந்த இரண்டு மோட்டார் வாகனங்கள் தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் பொலிஸிற்கு முறைப்பாடு செய்வதற்கும், பரிசோதனைகளை நடாத்துவதற்கும், பொறுப்பு வாய்ந்தவர்களை இனங்காண்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

(ஈ) அரச நிர்வாகச் சுற்றறிக்கை

| | | |
|---|---|---|
| 1999 ஒக்தோபர் 08 ஆந் திகதிய 22/99 ஆம் இலக்க சுற்றறிக்கை | - | அமைச்சின் ஒரு உத்தியோகத்தர் இன்னுமொரு நிதியத்தின் பதிற்கடமை உத்தியோகத்தராக, அந்தப் பதவிக்குரிய வாகனப் படியாக மாதாந்தம் ரூபா 30,000 வீதம் ரூபா 540,000 தொகையும், எரிபொருள் படியாக ரூபா 328,510 தொகையும் பெற்றிருந்ததுடன் அந்தக் காலப்பகுதிக்காக உள்ளபடியான பதவிக்குரிய உத்தியோகபூர்வ வாகனம் மற்றும் எரிபொருள் படியையும் அமைச்சிலிருந்து பெற்றிருந்தார். |

## 2.17 மனிதவள முகாமைத்துவம்

### 2.17.1 அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர், உள்ளபடியான பதவியணியினர் மற்றும் ஆளணி வேதனங்களுக்கான செலவினம்

அரச நிர்வாகம் மற்றும் முகாமைத்துவ அமைச்சின் கடமைகளை நிறைவேற்றுவதற்காக 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான அங்கீகரிக்கப்பட்ட, உள்ளபடியான மற்றும் வெற்றிடமான பதவியணி தொடர்பாக அமைச்சு கணக்காய்விற்குச் சமர்ப்பித்த விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன. மீளாய்வாண்டிற்காக அமைச்சினால் ஆளணி வேதன செலவின தொகுதிக்காக ரூபா 695.48 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை | உள்ளபடியான எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 85 | 68 | 17 |
| (ii) | மூன்றாம் நிலை | 21 | 14 | 07 |
| (iii) | இரண்டாம் நிலை | 1,326 | 1,013 | 313 |
| (iv) | ஆரம்ப நிலை | 232 | 191 | 41 |
| (v) | அமைய / ஒப்பந்த | 01 | 01 | - |
| | மொத்தம் | 1,665 | 1,287 | 378 |

(அ) மீளாய்வாண்டின் வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் காண்பிக்கப்படாதிருந்ததுடன், உள்ளபடியான பதவியணியினர் 1,369 ஆகும். எனினும், கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 1,665 ஆகவும், உள்ளபடியான பதவியணியினர் 1,287 ஆகவும் இருந்தமையால் உள்ளபடியான பதவியணியில் 82 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டின் பாதீட்டு மதிப்பீட்டிலும், செயலாற்றல் அறிக்கையிலும் காண்பிக்கப்பட்ட எண்ணிக்கைகள் ஒன்றுக்கொன்று முரண்பாடாக இருந்தமையின் காரணமாக வெற்றிடமான பதவிகளின் எண்ணிக்கையின் சரியான தன்மை உறுதிப்படுத்தப்படவில்லை.

**(இ) பதவியணியினருக்குப் பயிற்சியளித்தல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) அமைச்சினால் அதன் பதவியணியினரைப் பயிற்றுவித்தல் தொடர்பான போதியளவான தகவல்கள் பேணப்படாதிருந்தமையால் குறிப்பாக பயிற்சியளிக்கப்பட்ட எண்ணிக்கை அல்லது எந்த முறையிலும் பயிற்சி பெறாதிருந்த உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை என்பவற்றை வெளிப்படுத்த முடியாதிருந்தது.

(ii) கடந்த 05 வருடங்களில் பயிற்சி நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 516.6 மில்லியன் தொகையான நிதிஏற்பாடுகளில் ரூபா 457.1 மில்லியன் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் கடந்த 05 வருட காலப்பகுதியில் உத்தியோகத்தர்களுக்குப் பயிற்சியளிப்பதற்காக ஒதுக்கப்பட்ட நிதிஏற்பாடுகளை முழுமையாகப் பயன்படுத்தவதற்கு அமைச்சினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.18 அரசாங்க உத்தியோகத்தர்கள் பிணை வைத்தல்**

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 880 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் அரசாங்கத்தின் பணம், வருமானம், முத்திரை அல்லது பொருட்கள் போன்றவற்றை கையேற்றல் அல்லது பொறுப்பாக இருத்தல், மற்றும் நிர்வாக ரீதியாக பொறுப்பாக இருக்க வேண்டிய மற்றும் அரசாங்க கணக்குகளுக்குரிய பொறுப்புக்கள் கையளிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள் பிணைக் கட்டளைச் சட்டத்திற்கு இணங்க பிணை வைப்பு செய்திருக்கவில்லை.